இந்து சமய அறநிலையத்துறை

அனுப்புநர்

ஜெ.குமரகுருபரன், இ.ஆ.ப.,
ஆணையர்
சென்னை–34

பெறுநர்

1. அனைத்து இணை ஆணையர்கள்
2. அனைத்து இணை ஆணையர்/ செயல் அலுவலர்கள்
3. அனைத்து துணை ஆணையர்/ செயல் அலுவலர்கள்
4. அனைத்து உதவி ஆணையர்கள்
5. அனைத்து உதவி ஆணையர்/ செயல் அலுவலர்கள்

சுற்றறிக்கை ந.க.எண்.31154/2010/எம்.3/ நாள்15.09.2021

அய்யா/அம்மையீர்,

பொருள்: அறநிறுவனங்களுக்கு சொந்தமான அசையாச் சொத்துக்களுக்கு கேட்பு, வசூல், நிலுவை விவரங்கள் கணினியில் பதிவேற்றம் செய்தல் அறிவுரை வழங்கியது – தொடர்பாக.

பார்வை: 1) இவ்வலுவலக சுற்றறிக்கை ந.க.எண். 31154/10/ எம்.3/ நாள.07.08.2021
2) இவ்வலுவலக சுற்றறிக்கை ந.க.எண். 31154/10/ எம்.3/ நாள் 19.08.2021
3) இவ்வலுவலக சுற்றறிக்கை ந.க.எண். 31154/10/ எம்.3/ நாள் 31.08.2021.

****

பார்வை 3–ல் கண்ட சுற்றறிக்கையில் இந்து சமய அறநிலையத்துறை கட்டுப்பாட்டில் உள்ள அறநிறுவனங்களில் குத்தகைதாரர்/ வாடகைதாரர்–களால் செலுத்தப்படும் குத்தகை/ வாடகை தொகைக்கு அச்சடித்த இரசீது வழங்கும் முறையினை ரத்து செய்து 15.09.2021 முதல் இணையதள வழியில் அந்தந்த அறநிறுவனங்களின் நிர்வாகத்திற்கு குத்தகை / வாடகையினை செலுத்திட நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும் எனவும் அனைத்து சார்நிலை அலுவலர்களுக்கும் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

இந்நிலையில், அனைத்து அறநிறுவனங்களுக்கு சொந்தமான அசையாச் சொத்துக்களுக்கான கேட்பு, வசூல், நிலுவை குறித்த

Verified RedEstate

விவரங்களை விடுதல் இல்லாமல், 13.09.2021-க்குள் தவறாமல் கணினியில் பதிவேற்றம் செய்யப்பட வேண்டுமெனவும், மேலும் இது தொடர்பாக இவ்வலுவலகத்திலிருந்து அனுப்பப்பட்ட சான்றினை பூர்த்தி செய்து அனுப்பப்பட வேண்டுமெனவும் அறிவுறுத்தப்பட்டிருந்தது.

ஆனால், இந்த பணியில் பெரும்பான்மையான அலுவலர்கள் போதிய முன்னேற்றம் காட்டவில்லை. மேலும், நிறைவுச்சான்று மிகச்சில அலுவலர்களால் மட்டுமே பதிவேற்றம் செய்யப்பட்டுள்ளது. இதனால், கேட்பு வசூல் நிலுவை விவரங்கள் முழுமையாக இணைய வழியில் நடைமுறைபடுத்துவது தாமதமாகிறது.

அறநிறுவனங்களில் குத்தகைதாரர் / வாடகைதாரர்களால் செலுத்தப்-படும் குத்தகை/ வாடகை தொகைக்கு அச்சடித்த இரசீது வழங்கும் முறையினை 15.09.2021 முதல் ரத்து செய்து இணையத்தள வழியில் அந்தந்த அறநிறுவனங்களின் நிர்வாகத்திற்கு குத்தகை / வாடகையினை செலுத்திட நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும் என உத்தரவிடப்-பட்டிருந்ததை மாறுதல் செய்து, 01.10.2021 முதல் நடைமுறைபடுத்திட வேண்டுமென அனைத்து சார்நிலை அலுவலர்களுக்கும் அறிவுறுத்தப்படுகிறது.

எனவே, 24.09.2021-க்குள் தவறாமல் அனைத்து அறநிறுவனங்-களுக்குச் சொந்தமான அசையாச் சொத்துக்களுக்கான கேட்பு வசூல் நிலுவை விவரங்களை விடுதல் இல்லாமல் கணினியில் பதிவேற்றம் செய்து இப்பணியினை துரிதப்படுத்தி முடிக்கப்பட வேண்டுமென மீண்டும் அறிவுறுத்தப்படுகிறது.

இச்சுற்றறிக்கை விவரத்தை தங்களது ஆளுகையின் கீழ் உள்ள அனைத்து அறநிறுவனங்களின் நிர்வாகிகள்/ செயல் அலுவலர்களுக்கு தெரிவித்திட வேண்டுமெனவும் கேட்டுக் கொள்ளப்படுகிறது. இச்சுற்றறிக்-கையினை பெற்றுக் கொண்டமைக்கு உடன் ஒப்புதல் வழங்கிட கேட்டுக் கொள்ளப்படுகிறது.

ஒம்./-ஜெ.குமரகுருபரன்
ஆணையர்

/உ.ந.உ.ப./

15.9.2021
கண்காணிப்பாளர்

15.9.2021

Verified by RedEstate